
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**796**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## ரம்ஜான் ஒன்றுதான்; கொண்டாட்டம் இரண்டு!

உலகெங்கும் இருக்கிற இஸ்லாமியர்கள் தங்களின் பெருவிழாவான ரம்ஜானைச் சிறப்பாகக் கொண்டாடியுள்ளனர். போரினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட காசாவில் கூட, குண்டுவீச்சால் உருக்குலைந்து குப்பைமேடாக காணப்படும் மசூதிக்கு அருகிலேயே தொழுகை நடத்தி, ரம்ஜானைக் கொண்டாடிய காட்சிகளை ஊடகங்களில் கண்டோம். ஆனால், உலகில் அதிகமான இஸ்லாமியர்கள் வாழும் நாடான இந்தியாவிலோ இரண்டு விதமான ரம்ஜான் கொண்டாட்டங்களைக் காண முடிந்தது. ஒன்று வடக்கில் அச்சத்தோடு கொண்டாடப்பட்ட ரம்ஜான்; மற்றொன்று தெற்கில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட ரம்ஜான்.

குறிப்பாக, உத்தரப் பிரதேச மாநிலத்தில் உளவியல் ரீதியாக இஸ்லாமியர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகினர். மீரட் மாவட்டத்தில், சாலைகளில் தொழுகை நடத்தக்கூடாது, மீறினால் சட்ட நடவடிக்கை பாயும், பாஸ்போர்ட் உரிமம் ரத்து செய்யப்படும் என்று காவல்துறையே எச்சரிக்கை விடுத்தது. ஆனால், இந்துக்களின் விழாக்களுக்கு இதுவரை இப்படி எந்த உத்தரவும் எங்கும் பிறப்பிக்கப்பட்டதே கிடையாது. சம்பல் மாவட்டத்தில், சமீபத்தில் நடந்த கலவரத்தைக் காரணம் காட்டி, வீட்டின் மொட்டை மாடிகளில் கூட தொழுகை நடத்தக்கூடாது என, அரசே மிரட்டல் விடுத்தது. அதிகப்படியான காவலர்களைப் பொது இடங்களில் இறக்கிவிட்டு, வீண் பதற்றத்தை ஏற்படுத்தினர்.

உத்தரப் பிரதேசத்தின் இந்த உளவியல் அச்சுறுத்தல்களைப் பார்த்து, பீகாரிலும் இதே கெடுபிடிகளைப் பின்பற்ற வேண்டுமென்று அங்குள்ள இந்துத்துவா அமைப்புகள் அரசை வற்புறுத்தின. ஆனால், தமிழ்நாட்டிலோ பிரியாணியும், இனிப்புப் பரிமாறலுமாக ரம்ஜானை இஸ்லாமியர்களோடு இணைந்து இந்துக்களும் கொண்டாடினர். கோவையில், கோட்டை ஈஸ்வரன் கோயிலுக்குச் சென்ற இஸ்லாமியர்கள், அங்கே இருந்த அனைவருக்கும் இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர். பதிலுக்கு கோயில் நிர்வாகத் தரப்பில் இருந்தும் கட்டியணைத்து ரமலான் வாழ்த்துக்களைத் தெரிவித்த காட்சிகள் இணையத்தை ஆக்கிரமித்தன. இதுபோல தேவாலயங்களுக்கும் சென்று இனிப்பு வழங்கி, ரம்ஜானைக் கொண்டாடினர் இஸ்லாமியர்கள். சமூக ஊடகங்களிலும் இருதரப்பும் மாறி மாறி தங்களது வாழ்த்தையும், அன்பையும் பரிமாறிக்கொண்டனர்.

ஒரே நாடு, ஒரே பண்டிகை, ஆனால், கொண்டாட்ட மனநிலை மட்டும் இரண்டு.

“வடக்கு பிற்போக்கானது; தெற்கு முற்போக்கானது” என்ற புரட்சியாளர் அம்பேத்கரின் கருத்து இன்றும் பொருந்திப் போகிறது.

## ஃப்ளாஷ்பேக்





கடக்கரசி அஜீஸ்கான்

### அன்னை சத்தியவாணிமுத்து பகுத்தறிவு மன்றம்!

1970-ஆம் ஆண்டு சென்னை, பெரம்பூரில் எனது 30-வது வயதில் ‘அன்னை சத்தியவாணிமுத்து பகுத்தறிவு மன்றம்’ என்ற அமைப்பை உருவாக்கி, கழகப் பணியாற்றி வந்தேன். அதுசமயம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளன்று கோபாலபுரம் இல்லம் சென்று, தலைவர் அவர்களிடம் தேர்தல் நிதி வழங்கி, அவருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டேன். மறக்கமுடியாத இந்தப் புகைப்படத்தைப் பொக்கிஷம் போல் பாதுகாத்து வருகிறேன்.

– கடக்கரசி அஜீஸ்கான்,
திருவல்லிக்கேணி, சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## மலரும் நினைவுகள்

### சிறந்த முதலமைச்சர்!

1970-ஆம் ஆண்டு, கலைஞர் ஆட்சிக்காலம் குறித்து ‘கேரவன்’ ஆங்கில இதழ் சிறப்புக் கட்டுரை எழுதியது. அந்தக் கட்டுரையில் ‘46 வயது நிரம்பிய கலைஞர் திறமைமிக்க நுட்பவாதி என்பதை நிரூபித்து விட்டார்’ எனப் பாராட்டியது. ‘அமைச்சரவைக் கூட்டங்களை ஒழுங்காகக் கூட்டுகிறார். முடிவுகளுக்கு அமைச்சரவையின் முழு ஒப்புதலைப் பெறுகிறார்’ என்றும், ‘சிறப்பான முதலமைச்சர் கலைஞர்’ என்றும் பாராட்டி இருந்தது ‘கேரவன்’ இதழ்.

# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர்

**56**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம், இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

வகுப்புரிமைக்கு எதிராகத் தொடர்ந்து குரல்கொடுத்த திரு.வி.க., வகுப்புரிமைக்குப் போராடிய தலைவர்களையும் இயக்கங்களையும் தொடர்ச்சியாகத் தாக்கி வந்தார். குறிப்பாக, நீதிக்கட்சியைத் தாக்கினார். நீதிக்கட்சியின் வளர்ச்சியைத் தடுப்பதற்காகவே தொடங்கப் பட்ட சென்னை மாகாண சங்கத்தில், முக்கிய பொறுப்பு வகித்த திரு.வி.க., அந்தச் சங்கத்தின் சார்பில், வெளியிடப்பட்ட ‘தேசபக்தன்’ இதழின் ஆசிரியராக இருந்தார். அந்தப் பத்திரிகை மூலம், நீதிக்கட்சியைத் தொடர்ச்சியாகத் தாக்கி எழுதினார்.

“நம் நாட்டில் பல வகுப்பினர் வாழ்கின்றனர். நாட்டின் நலன் கருதி, அனைத்து வகுப்பாரும் ஓரினத்தவராய் ஒருமைப்பாட்டுடன் தொண்டாற்றுவார்களெனில், நாட்டுக்கு நலன் விளையும்” என்று கூறிய திரு.வி.க. அதற்காக வகுப்பு நலன் என்ற எண்ணத்தைக் கைவிடக் கோரினார்.

“தேசத்தில் பலதிற வகுப்பினர் வாழ்கின்றனர். தேசத்தின் பொருட்டு அவ்வகுப்பினரெல்லாரும் ஓரினத்தவராக ஒன்றுபட்டுக் கடனாற்றுவரேல், தேசத்துக்கு நலம் விளையும் என்பதில், எட்டுணையும் ஐயமின்று. தேசத்தின் பொருட்டு, வகுப்பு வேற்றுமையைத் தொலைக்க முயல்வோருள்ளும், தொன்றுதொட்டு வரும் வழக்க ஒழுக்கங்கள் குறுக்கிட்டு, அவர்தம் ஒருமை உணர்வையுங் குலைக்கின்றன. வழக்க ஒழுக்கங்களை விட்டுக் கொடுக்க மக்கள் மனம் எளிதில் விரைந்தெழாது. சில வழக்க ஒழுக்கங்கள் வகுப்புணர்வுக்கும் காரணமாக நிற்கின்றன. வழக்க ஒழுக்கங்கள் உடலைப் பற்றியனவேயன்றி உயிரைப் பற்றியனவல்ல. புற வழக்க ஒழுக்கங்கள்மீது கருத்தைச் செலுத்தாது, அக ஆன்ம நேயத்தின்கண் கருத்தைச் செலுத்தின், வகுப்பு வேற்றுமை தலைக்காட்டா தொழியும். ஆகவே, புற வழக்க ஒழுக்கத்தினும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டை ஓம்ப முயல்வது அறிவுடைமை.

### வகுப்புரிமை, பூசலைக் கிளப்பும்


இப்பொழுது, நமது நாட்டிலுள்ள வகுப்பு வேற்றுமைகளை, விரைவில் களைய இயலாதென்பது எவரும் அறிந்ததொன்று. அவ்வகுப்பு வேற்றுமைகளைப் பாராட்டாது கடனாற்றும் உறுதியில் நிலைத்து நிற்க முயல்வது அரியதன்று. இம்முயற்சியில், தலைப்பட்டுழைக்கவே அறிஞர்கள் முயலல் வேண்டும். ஆனால், நமது நாட்டு அறிஞர்களிற் பெரும்பான்மையோர், வகுப்பு வேற்றுமையைத் தமது நலத்துக்கு ஒரு கருவியாகக் கொண்டு, வகுப்புப் பூசலைக் கிளப்பி வருகிறார். இப்பூசலைக் கிளப்புவோர் தேசத்தை மறந்தவர் என்று கூறவும் வேண்டுமோ?

நமது தேசத்துப் பொருள் பல, மேல்நாட்டுக்குச் சென்ற வண்ணமாயிருக்கின்றன. அதனால், தேசத்தில் வறுமை முதலிய சிறுமைகள் வேரூன்றிவிட்டன. அவ்வறுமை முதலியன தேசத்திலுள்ள ஒரு வகுப்பாரை மாத்திரம் பாதிக்குமா எல்லாரையும் பாதிக்குமா என்பது சிந்திக்கற்பாலது. அங்ஙனமே அரசாங்கத்தால் விதிக்கப்படும் வரி, சட்டம் முதலியனவும் தேசத்திலுள்ள எல்லா வகுப்பாரையும் பாதித்தல் வெளிப்படை. இத்தகையத் துன்பங்களைக் களைய தேச உரிமை வேண்டற்பாலதா வகுப்புரிமை வேண்டற்பாலதா என்பது ஊன்றி ஆராயற்பாலது. தேசத்தின் சிறுமை போக்க முயல்வோர் உள்ளத்தில், வகுப்பு வேற்றுமையே தோன்றாது. தோன்றினும் அதை அவரது தேசபக்தி விழுங்கிவிடும். வகுப்பு வேற்றுமையுணர்வும் பற்றும், தேசத்தை மறத்தல் செய்யும். ஆதலால், தேசத்திற் பிறந்தவர்கள் தேச நலத்தின்மீது கவலை செலுத்தல் வேண்டும்”என்றெல்லாம் ‘தேசபக்தன்’ இதழில் எழுதினார். ‘தேசபக்தன்’ இதழின் ஆசிரியர் பொறுப்புக்காக, கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த திரு.வி.க. வேலையை விட்டுவிட்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நீதிக்கட்சியைத் தாக்கியதைப் பற்றி, திரு.வி.க. பின்வருமாறு கூறுகிறார்:

“தொடக்கத்தில் காங்கிரஸ் சார்பில், கூடுங் கூட்டங்களில் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கையை மறுப்பதை, யான் ஒரு பெருந் தொண்டாகக் கொண்டேன். அத்தொண்டு காலத்துக்கு உரியதாகியது. அதைக் காலதேவதையும் நாடியது. வகுப்புவாதத்தால் நாட்டின் ஒருமைப்பாடு குலையும் என்று யான் நம்பினேன்; உறுதியாக நம்பினேன். அந்நம்பிக்கையினின்றும் யான் இன்னும் மாறுதலடையவில்லை. வகுப்புவாதத்தை, காங்கிரஸ் ஏற்கும் நிலை நேர்ந்தாலும், யான் காங்கிரஸுடன் பிணங்கியே நிற்பேன். ‘ஜஸ்டிஸ்’ கட்சியைக் குலைக்குந் தொண்டு சென்னையில் நாலாபக்கமும் நிகழ்ந்தது; வெளியூர்களிலும் நிகழ்ந்தது. செல்வாக்குடைய ‘தேசபக்த’னும், தமிழ்நாட்டிலுள்ள பலப்பல தொழிற்சங்கங்களும் என் வயப்பட்டிருந்த மையால், ‘ஜஸ்டிஸ்’ கட்சியின் ஆக்கத்தைச் சிதைப்பது எனக்கு அருமையாகத் தோன்றிய தில்லை. கூட்டங்களில் யான் ‘ஜஸ்டிஸ்’ கொள்கையைத் தாக்குவேன்;”

## வகுப்புரிமையா? தேச நலனா?



ஓவியம் : ரவி பேலட்

> “வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கைக்கு சென்னை மாகாணம் முழுமையும் பெரும் ஆதரவு கிடைத்தது. ஏனெனில், ‘வகுப்பு நலனே தேச நலன்’ என்று மக்கள் கருதினர்.”

வகுப்புவாரிக் கொள்கையை திரு.வி.க. ஆதரித்ததும் இல்லை, மாறாக அது தீமை விளைவிக்கும் என்பதையே பேசிவந்துள்ளார்; “வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஆதரித்து, இதுகாறும் யான் எவ்வகைக் களத்திலும் பேசியதில்லை, எப்பத்திரிகையிலும் எழுதியது மில்லை. அதனால் விளையுந் தீமைகளைப் பற்றி பல இடங்களில் பேசியிருக்கிறேன், எழுதியுமிருக்கிறேன். வகுப்புவாரிப் பிரதிநிதித்து வத்தால் நாட்டுக்கு நன்மை விளையாதென்பது என் உள்ளக்கிடக்கை” என்றார்.

‘ஜஸ்டிஸ்’ கட்சியையும், அதன் பின்னர் உருவான ‘சுயமரியாதை இயக்க’த்தையும் ‘குடியரசு’ பத்திரிகையையும் குலைக்கும் வேலை சென்னை மாகாணம் முழுமையும் நடைபெற்றாலும், அதைக் குலைக்க இயன்றதா? அன்றைய சென்னை மாகாண நிலவரம் எவ்வாறு இருந்தது என திரு.வி.க.வே கூறுகிறார்:

“பார்ப்பனப் புரோகிதம், சடங்குகள் முதலியவற்றைத் தொலைக்க வேண்டுமென்னுங் கருத்து கொண்டு ‘குடியரசு’த் தலைவருடன் சிலர் சுற்று கிறாரேயன்றி, அத்தலைவரின் நாத்திகக் கூற்றுகட்கு உடன்பட்டு அவர் சுற்றுகிறாரில்லை. தாம் போகுமிடங்களிலெல்லாம் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவதைக் கண்டு ‘குடியரசு’த் தலைவர் இறுமாந்து கிடக்கிறார் என்பது அவரெழுத்தால் விளங்குகிறது. அப்பெருங் கூட்டங் கூடுவதன் காரணம் யாது? ‘குடியரசு’த் தலைவர் அறிவுறுத்தும்‘மேலான ஞான போதையை’ச் செவிமடுக்கவா அக்கூட்டங்கள் கூடுகின்றன? இல்லை; இல்லை. பின்னை என்ன? பிராமண துவேஷமே காரணம். நாட்டில் பிராமண துவேஷம் நிரம்பியிருக்கிறது. இந்நாளில், ஒரு நாய் சென்று பிராமண துவேஷப் பிரசாரஞ் செய்யினுங் கூட்டஞ் சேரும் நிலையில் நாடு இருக்கிறது.”

திரு.வி.க.வின் மேற்கண்ட கூற்றில் இரண்டு விஷயங்கள் புலப்படுகின்றன. ஒன்று, தந்தை பெரியார் சென்ற இடங்களிலெல்லாம் பெருங்கூட்டம் கூடியுள்ளது. பார்ப்பன ஆதிக்க எதிர்ப்புப் பிரச்சாரத்திற்கு சென்னை மாகாணத்தில் பெரும் ஆதரவு கிடைத்திருக்கிறது. பார்ப்பன ஆதிக்க எதிர்ப்புப் பிரச்சாரத்தில் வகுப்புரிமை ஆதரவுப் பிரச்சாரமும் கலந்தே இருக்கிறது.

“இப்பொழுது வகுப்பு வேற்றுமையைப் பற்றியும், வகுப்புரிமையைப் பற்றியும், வகுப்புப் பூசலைப் பற்றியும் பல இடங்களில் பிரசாரங்கள் மிக உரமாக நடைபெற்று வருகின்றன. அப்பிரசாரத்தால் வகுப்பு வேற்றுமை வாடை உரமாக வீசினும், அதை எதிர்த்து நிற்கவேண்டுவது தேசபக்தர் கடமை. இவ்வேளையில், காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள இடர்கள் பலப் பல. அவ்விடர்களை யெல்லாம் கடந்தே தீரல் வேண்டும். உண்மை தேசபக்தர்கள், தேசத்தை வகுப்புப் பூசலுக்கு இரையாக்காது, பரந்த உணர்வுகொண்டு, வகுப்புரிமையை மறந்து, தேச உரிமையை நாடி உழைப்பது அறமாகும் என்று எண்ணிய நாம் அனைவரும் ஒரு தாயின் புதல்வர்கள் என்ற நினைவிலிருந்து வழுவாது இருக்கவேண்டும்” என்று திரு.வி.க. விரும்பினார். ஆனால், அவர் விருப்பத்திற்கு மாறாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கைக்கு சென்னை மாகாணம் முழுமையும் பெரும் ஆதரவு கிடைத்தது. ஏனெனில், ‘வகுப்பு நலனே தேச நலன்’ என்று மக்கள் கருதினர். தேச நலன் என்ற பெயரில் ஒரு வகுப்பினர் மட்டும் ஆதிக்கம் செலுத்துவதை மக்கள் ஆதரிக்கவில்லை.

...குரல் ஒலிக்கும்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.